[6th March 1961

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்பொழுதெல்லாம் ஸ்டேஜ் 1 ப்ளாக்கில் திறக்கப்பட்டு வருகின்றன. அதுவும் ஸ்டேஜ் 1 ப்ளாக்கில் இருந்தால் அந்த அடிப்படையில் அங்கேயும் ஒன்று திறக்கப்படும்.

Mid-day meals

*600 Q.—SRI A. VEDARATHNAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் எத்தனை பள்ளிகளில் எத்தனை மாணவர்களுக்கு மதிய உணவு அளிக்கப்படுகிறது ?

(இ) உடைதானம் எத்தனை மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) A statement [a] is placed on the table of the House.

SRI A. VEDARATHNAM : இன்னும் மதிய உணவு திட்டத்தை ஆரம்பிக்கவேண்டிய ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் எவ்வளவு இருக்கின்றன ? அவற்றிலும் இந்த மதிய உணவு திட்டத்தை ஆரம்பிக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: இருபத்தைந்தாயிரத்து இருநூற்று தொண்ணூற்றி நான்கு பள்ளிக்கூடங்களில் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டன. தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய மொத்த பள்ளிக்கூடங்கள் சுமார் 26 ஆயிரத்தி சொச்சம். ஆகவே பாக்கி இருக்கக்கூடிய ஆயிரத்தி சொச்சம் பள்ளிக்கூடங்களில் இந்த ஆண்டிற்குள் ஆரம்பிக்கப்பட்டு விடும்.

SRI A. VEDARATHNAM: அரசாங்கமே இதற்கு உதவி அளித்து வருகிற காரணத்தால் அதை ஆரம்பிக்க வேண்டும் என்று அரசாங்கம் ஏன் அவர்களை வற்புறுத்தக்கூடாது ஆகவே பள்ளிக்கூடம் நடத்துகிறவர்களை அரசாங்கம் தூண்ட முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: இப்பொழுதுள்ள சமுதாயத்தில் பத்தில் நான்கு பங்கு அவர்கள் கொடுக்க வேண்டும் என்ற விதி இருக்கிறது. அதனால் கிராமங்களில் இருக்கிறவர்கள் ஓரளவு அக்கறை எடுத்துக்கொண்டு வந்தால்தான் இந்தத் திட்டம் நல்ல முறையில் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும். அதைப் பற்றியும் இப்பொழுது பரிசீலனை செய்து முடிவு எடுக்க ஒரு குழு அமைக்கப்பட்டு அது தன்னுடைய அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறது. அதைப்பற்றி பரிசீலனை செய்து அந்த முறையில் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டு மென்பதைப்பற்றி முடிவு செய்யப்படும்.

SRI T. T. DANIEL : In view of the fact that there are students studying even in Middle and High Schools without mid-day meals, has the Government any proposal to extend this mid-day meal scheme to these schools through (social service agencies) like Bharat Sevak Samaj as is being done in Kanyakumari district?

---

a Printed as Append x II on page 422 infra.

6th March 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM : This scheme is in operation in 506 Secondary schools where mid-day meal is provided for 13,619 students.

SRI S. M. ANNAMALAI : மதிய உணவு திட்டத்திற்கு அரசாங்கம் பணம் கொடுத்து உதவுகிறதே அப்படி இல்லாமல் அரிசியாக வழங்க ஏதாவது அரசாங்கத்தினிடம் உத்தேசம் உண்டா ? அது பரிசீலனையில் இருக்கிறதா ? அதைப் போலவே எல்லோரும் ஒரே மாதிரியான உடையை அணிந்து கொள்ள வேண்டும் என்று அரசாங்கத்திற்கு உத்தரவு போட உத்தேசம் ஏதாகிலும் உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : மதிய உணவு திட்டத்தைப்பற்றி கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. துணியைப்பற்றி இல்லை. ஆகவே துணியைப்பற்றி கேட்பதாக இருந்தால் தனிக் கேள்வி போட வேண்டும். அரிசி கொடுப்பதைப்பற்றி பரிசிலனை செய்து முடிவு செய்யவேண்டும்.

SRI T. K. SUBBIAH : இந்த மதிய உணவு திட்டம் சம்பந்தமாக சில கிராமங்களில் புரம்போக்கு நிலங்களை அடமானம் செய்ய வேண்டும் என்று மக்கள் கேட்டால் சர்க்கார் அடமான உத்தரவு கொடுக்குமா ? அப்படி அடமானம் செய்வதாக இருந்தால் யார் பேரால் எந்த அடிப்படையில் அடமானம் செய்வது என்பதைப் பற்றி விளக்குவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைப்பற்றி சர்க்கார் இன்னும் முடிவு செய்யவில்லை.

SRIMATHI HEMALATHA DEVI : தற்போது மதிய உணவு திட்டத்திற்கு சர்க்கார் ஆறு நயா பைசா கொடுக்கிறார்களே அதை ஒன்பது நயா பைசாவாக உயர்த்திக் கொடுக்க முன் வருவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : உயர்த்துவதைப்பற்றி யோசிப்பதற்கு முன் இப்பொழுது இருப்பதையே சரியாக உபயோகப்படுத்தினல் அதன் மூலமே நல்ல பலன் ஏற்படும்.

SRI K. VINAYAKAM : Sir, whereas in the City of Madras the City Corporation finances from its resources the mid-day meal scheme, the private institutions could not undertake the scheme as the rate of subsidy paid to them is very low. Will the Government consider and come forward to enhance the rates, if any, given to the private schools?

THE HON. SRI C. SUBRAMANIAM : If the hon. Member, Sri K. Vinayakam has got any scheme he might submit it to the Government.

SRI K. PERIANNAN : மதிய உணவு கொடுக்கும் திட்டத்தில் ஆறு நயா பைசா கொடுப்பது மிகவும் பிற்போக்காக உள்ள கிராமங்களுக்குப் போதாமல் இருப்பதால் அந்த ஆறு நயா பைசா என்பதை இரண்டணவாக மாற்றி அமைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

[6th March 1961

THE HON. SRI C. SUBRAMANIAM: இதில் ஒன்பது நயா பைசா, இரண்டணு, மூன்று அணு என்பது அல்ல ஆறு நயா பைசா வீதம் கொடுப்பதாலேயே 137 லட்சம் ரூபாய் ஆகிறது என்று கணக்கிட்டு அதை அடுத்த ஆண்டு பட்ஜெட்டில் ஒதுக்கப் பட்டிருக்கிறது. அதற்கு மேலும் ஒதுக்க முடியுமா என்பதைப் பற்றி பட்ஜெட் சமயத்தில் விவாதிக்கும்போது அவர்கள் ஆலோசனை சொல்லலாம்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : The Government have constituted a Committee to go into the question. Will the Hon. Minister tell whether the Committee has submitted its recommendations, and if so, what are the proposals?

THE HON. SRI C. SUBRAMANIAM : The report was submitted only day before yesterday to the Government. It is under scrutiny.

SRI A. A. RASHEED : Sir, is the Hon. the Minister aware of the fact that monotonous meal of the same variety is supplied to the students? Will the Government consider to provide a tasty and nutritious mid-day meal to the students?

THE HON. SRI C. SUBRAMANIAM : The supply is being made by the Village Committee. Certainly it is within the competence of the Committee to change the diet.

SRI N. MARUDACHALAM: மதிய உணவு திட்ட அடிப் படையில் பொது ஜனங்களுடைய உதவியை அரசாங்கம் நாடு வதால் சிலர் கொடுக்க முன் வருவதில்லை. அதனால் சில இடங்களில் பள்ளிக்கூடங்களை மூடி விடுகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதனால் இந்தத் திட்டம் சரியாக நடைபெறவில்லை என்பதைப்பற்றி அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: கொடுக்கிறவர்கள் கொடுத் துக்கொண்டுதான் இருக்கிறார்கள். கொடுக்க மறுக்கிறவர்கள் மறுத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

SRI T. IRUSAPPAN: மதிய உணவு திட்டம் சரிவர நடக்கிறதா என்று பரிசீலனை செய்ய சேலம் மாவட்டத்தில் ஒரு கமிட்டி சுற்றுப்பிரயாணம் செய்து அது சரிவர நடைபெறவில்லை என்று ஒரு ரிபோர்ட் அனுப்பி இருக்கிறதே அதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

THE HON. SRI C. SUBRAMANIAM: இப்பொழுது சமீபத்தில் தான் சமர்ப்பித்திருக்கிறார்கள். அது இப்பொழுது பரிசீலனையில் இருக்கிறது.

Harijan hostel

* 601 *Q*.—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether any request has been made by the public of Valanur, Tiruppullani Block, to the Hon. Minister for Works to